மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.94/2020</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் 17ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>17.09.2025 வா.சா.1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பெரியசாமி கவுண்டர் மற்றும் தேவாத்தாள் ஆகியோர்களின் வாரிசு என்ற முறையில் தான் நான் இந்த வழக்கை போட்டுள்ளேனா என்றால் ஆமாம். எந்த வகையில் நான் மேற்படியார்களுக்கு வாரிசு என்று சொல்கிறேன் என்றால் பெரியசாமி கவுண்டர் மற்றும் தேவாத்தாள் ஆகியோர்களின் மகளான ருக்மணி என்பவரின் மகன் என்ற அடிப்படையில் சொல்கிறேன். ருக்மணி தற்போது உயிரோடு உள்ளாரா என்றால் 1980 ஆம் ஆண்டு இறந்து விட்டார் தேவாத்தாள் மற்றும் பெரியசாமி கவுண்டர் ஆகியோர்களுக்கு ருக்மணி என்பவர் மட்டும்தான் வாரிசு என்பதை காட்டும் வகையில் நான் மேற்படியார்களின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் இல்லை இறப்பு சான்றிதழ்கள் மட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

2. நான் ருக்மணியின் வாரிசு என்பதற்கான வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை என்னுடன் பிறந்தவர்கள் யாராவது உள்ளார்களா என்றால் இல்லை. என் தகப்பனார் உள்ளாரா என்றால் அவர் 1993 ல் காலம் ஆகிவிட்டார். ருக்மணி மற்றும் என் தகப்பனார் நாச்சிமுத்து ஆகியோர்களுக்கு நான் மட்டும்தான் வாரிசு என்பதற்கான வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எனது தகப்பனாரான நாச்சிமுத்து கவுண்டரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன்.

3. நான் நாச்சிமுத்து கவுண்டரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றும் தேவாத்தாள் மற்றும் பெரியசாமி கவுண்டரின் இறப்பு சான்றிதழ்களை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான் மட்டும் வாரிசுதாரர் அல்ல என்றும் இன்னும் சில வாரிசுதாரர்கள் உள்ளார்கள் என்றும் அவர்களை மறைத்து விட்டு நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. எனது தாத்தா பெரியசாமி கவுண்டர் என்பவர் சம்பத்குமார் என்பவருக்கு தாவா காலை எண்ணில் 04.03.1987 ஆம் தேதி 1 ஏக்கர் 1 சென்ட் நிலத்தை விற்பனை செய்ததாக நான் சொல்வது தவறு என்றும் மேற்படி தேதியில் 1 ஏக்கர் 1 சென்ட் மற்றும் தடத்திற்காக 10-1/2 சென்ட் பூமி ஆகியவற்றை சேர்த்து விற்பனை செய்து உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு காலை எண்ணில்

ஏற்கனவே கிரையம் பெற்ற ஒரு சம்பத்குமார் என்பவரை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். அதனால் உரிய தரப்பினரை கட்சி சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

5. ஆணையர் அறிக்கையின்படி 13–1/2 சென்ட் நிலம் உள்ளதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் சம்பத்குமாருக்கு எனது தாத்தா பெரியசாமி கவுண்டர் விற்பனை செய்த 10–1/2 சென்ட் நிலம் போக மீதம் 3 சென்ட் நிலம் மட்டுமே இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரி உள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.09.17 18:15:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்